பக்கங்கள்:-17

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | மாசி 21 | செவ்வாய்க்கிழமை | 05.03.2024 | அதிர்வு 217






## பல்லாயிரக்கணக்கான மக்கள் கதறியழ

# மாவீரர் துயிலும் இல்ல வளாகத்தில் சாந்தனின் புகழுடல் நேற்று அடக்கம்

(எஸ்.நிதர்ஷன்)

**மறைந்த ஈழத்தமிழன் சாந்தனின் புகழுடல் யாழ். வடமராட்சி எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல மயான வளாகத்தில் பல்லாயிரக் கணக்கான மக்களின் கண்ணீர் மழையில் நேற்றிரவு நல்லடக்கம் செய்யப்பட்டது.**

06▶





# பிரபாகரனின் வீட்டு வளாகத்தில் சாந்தனின் புகழுடலுக்கு அஞ்சலி




(எஸ்.நிதர்ஷன்)

யாழ். வடமராட்சி – வல்வெட்டித்துறையில் உள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின்வீட்டுவளாகத்தில் நேற்று சாந்தனின் புகழுடலுக்கு

06▶




சாந்தனின் இறுதி கிரியைகளில் யாழ் மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்குபற்றினர்.

ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓரிரு அரசியல் பிரமுகர்களையும், ஜனநாயகப் போராளிகள் கட்சியினரையும் தவிர தமிழ் அரசியல்வாதிகள் பலரும் மிஸ்ஸிங்.

‘தமிழ்த் தேசியம் காக்கும்’ ஸ்ரீதரன் மட்டும் மஞ்சள் – சிவப்புக் கொடி போர்த்தித் தன் நிலைப்பாட்டை

06▶



# மன்னார் மடுவில் வீதியோரம் வளர்ந்து இருந்த தேக்கு மரங்களை தறித்துக் கடத்திய நபர்கள்!

## வீதியில் வெட்டிப் போட்ட கிளைகளால் போக்குவரத்துப் பாதிப்பு



(மன்னார் நிருபர்)

மன்னார் மடுவில் வீதியோரம் இருந்த வளர்ந்த தேக்கு மரங்களை மர்ம நபர்கள் வெட்டி குற்றிகளாக ஏற்றிச் சென்ற சம்பவம் ஒன்று இடம் பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் நள்ளிரவு மடு தேவாலயம் – மடு ரோட் சந்தி வீதிக்கு இடைப்பட்ட பகுதியில் உள்ள தேக்கு மரங்களை மர்ம நபர்கள் வெட்டி வாகனத்தில் ஏற்றிச் சென்றுள்ளனர் எனத் தெரிய வருகின்றது.

இவ்வாறு அவர்களால் வெட்டப்பட்ட மரத்தின் குற்றிகளை மர்ம நபர்கள் ஏற்றி சென்ற நிலையில் கிளைகள் வீதியிலேயே போடப்பட்டுள்ளன.

இதனால் நேற்றுக் காலை அந்த வீதியில் வாகனங்கள் பயணிக்க முடியாமல் போக்குவரத்துப் பாதிப்பு ஏற்பட்டிருக்கிறது.

மடு தேவாலயத்திற்கு சில கிலோ மீற்றர் தூரத்தில் வீதி ஓரம் வளர்ந்திருக்கும் பெறுமதியான தேக்கு மரங்கள் இவ்வாறு பல தடவைகள் மர்ம நபர்களால் வெட்டி எடுத்து செல்லப்பட்டுள்ளன எனப் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை மர்ம நபர்கள் தேக்கு மரங்களை வெட்டிய பகுதியில் இருந்து சில மீற்றர் தூரத்தில் இராணுவ முகாம் இருப்பதாகவும், சில கிலோ மீற்றர் தூரத்தில் மடு வீதிச் சந்தியில் மடு பொலிஸ் நிலையம் இருப்பதாகவும், அதற்கு அருகில் மடு ரோட் சந்தியில் இராணுவ சோதனை சாவடி இருப்பதாகவும் மறுபுறம் சில கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் மடு தேவாலய சந்தியில் பொலிஸ் காவலரணும் உள்ளதாகவும் சுட்டப்படுகின்றது.

இவ்வாறான நிலையில்தான் வீதியோரம் இருக்கும் பெறுமதியான தேக்கு மரங்கள் நள்ளிரவில் வெட்டப்பட்டு குற்றிகளாக இப்படிப் பல தடவைகள் ஏற்றி செல்லப்பட்டுள்ளன. அருகில் இராணுவம், பொலிஸ் உள்ள நிலையில் வீதியோரம் இருக்கும் மரத்தை இப்படி வெட்டிச் சென்றுள்ளனர் என அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை மடு தேவாலயத்தை அண்மித்த பெரியபண்டிவிரிச்சான் காட்டு பகுதிகளிலும் மற்றும் மடு – பரப்புக் கடந்தான் வீதிக்கு அருகில் இருக்கும் காட்டு பகுதிகளிலும் பெறுமதி வாய்ந்த மரங்களான முதிரை, பாலை போன்ற மரங்கள் வெட்டப்பட்டு குற்றியாக்கி கடத்தி செல்லப்படுகின்றன.

பெரும்பாலும் இவ்வாறு வெட்டப்படும் குற்றிகள் வவுனியாவிற்கு கொண்டு செல்லப்படுகின்றன எனக் கூறப்படுகின்றது.

இது தொடர்பில் பொலிஸார் உட்பட யாரும் இதுவரை பெரிய அளவில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் குற்றச்சாட்டுகள் முன் வைக்கப்படுகிறது.



எனவே இத்தகைய மரக்கடத்தல் காரர்களிடம் இருந்து வளங்களைப் பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்



# மின்சாரக் கட்டணம் 21.9 வீதம் குறைப்பு!

## பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு அறிவிப்பு

நேற்று நள்ளிரவு முதல் மின்சார கட்டணம் 21.9 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது எனப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அதிகாரிகளின் கூட்டத்தின் போது, இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

30 இற்கும் குறைந்த மின்சார அலகுகளுக்கான கட்டணம் 33 சதவீதத்தினால் குறைக்கப்பட்டுள்ளது.

அதேநேரம், 31 முதல் 60 வரையான அலகுகளுக்கான கட்டணம் 28 சத வீதத்தாலும் குறைக்கப்பட்டுள்ளது.

அத்துடன், 61 முதல் 90 வரையான அலகுகளுக்கான கட்டணம் 30 சத வீதத்தினாலும் குறைக்கப்பட்டுள்ளது எனப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக் குழு அறிவித்துள்ளது.

90 முதல் 180 வரையான அலகுகளுக்கு 24 சதவீதத்தினாலும், 180 இற்கு மேற்பட்ட அலகுகளுக்கான கட்டணம் 18 சதவீதத்தினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, சமய வழிபாட்டு தலங்களுக்கான கட்டணம் 33 சதவீதத்தினாலும், விருந்தகங்கள் மற்றும் உணவகங்களுக்கான கட்டணம் 18 சத வீதத்தினாலும் குறைக்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களுக்கான கட்டணம் 22 சதவீதத்தினாலும், பொதுவான கட்டணம் 23 சதவீத்தினாலும் குறைக்கப்பட்டுள்ளது எனப் பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.




# மின்சாரம், எரிபொருள்கள் விநியோகம் அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம்

மின்சாரம் மற்றும் எரிபொருள் விநியோகம் ஆகியவற்றை அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தி அதிவிசேட வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் கையொப்பத்துடன் வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்கீழ், மின்சார விநியோகம், பெட்ரோலிய உற்பத்தி, எரிபொருள் விநியோகம் ஆகியன அத்தியாவசிய சேவைகளாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

# தொல்பொருள் பாரம்பரியத்தை பாதுகாக்க புதிய சட்டம் ஒன்று கொண்டு வரப்படுமாம்!

## சமய, கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவிப்பு



“நாட்டின் தொல்பொருள்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்களைக் கண்டறிதல் மற்றும் அவற்றைப் பாதுகாத்து எதிர்கால சந்ததியினருக்கு வழங்குதல் ஆகியவற்றை முறையாக முன்னெடுப்பதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டமூலமொன்றை உருவாக்கவுள்ளோம்.”

– இவ்வாறு புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

“கடினமான சூழ்நிலையில் பராமரிக்கப்படும் புனிதத் தலங்களை பாதுகாப்பதற்கு தேவையான சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகளை வழங்குவதில் எமது அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. இது தொடர்பான ஆவணங்கள் தற்பொழுது சரிபார்க்கப்படுகின்றன. 2024 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்த புனிதத் தலங்களுக்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டை வழங்குவதே அமைச்சின் எதிர்பார்ப்பாகும்.

இந்த நாட்டின் தொல்பொருள்கள் மற்றும் தொல்பொருள் பாரம்பரியங்கள் கண்டறியப்பட்டு, பாதுகாக்கப்பட்டு எதிர்கால சந்ததியினருக்கு முறையான முறையில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக தொல்பொருள் திணைக்களத்துடன் இணைந்து புதிய சட்டம் ஒன்று உருவாக்கப்படுகிறது. அதில் சேர்க்கப்பட்டுள்ள சில விடயங்கல் தொடர்பில் அடிப்படை விதிகளை தயாரிக்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதற்கான கருத்துக்களும் ஆலோசனைகளும் பல்வேறு தரப்பினரிடம் இருந்து பெறப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத் தக்கது.

“பிக்கு கதிகாவத்” சட்டத்தைத் தயாரிக்கவும் எதிர்பார்த்துள்ளோம். அதற்கான முன்மொழிவுகளை மகா நாயக்க தேரர்களாலும் சங்க சபைகளாலும் வழங்குமாறு கேட்டுள்ளோம். இது எளிதான காரியம் அல்ல.

ஆனால் பிக்கு ஒழுக்கம் உட்பட பல்வேறு பிரச்சினைகளை இதன் மூலம் தீர்க்க முடியும் என்று பெரும்பான்மையானவர்கள் நம்புகிறார்கள். அத்துடன் இலங்கையை தேரவாத சர்வதேச பௌத்த நிலையமாக மாற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்தை நடைமுறைப்படுத்த அமைச்சு என்ற ரீதியில் நாம் தயாராக உள்ளோம்.” – என்றார்.

# மட்டக்களப்பில் கோர விபத்து! இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!!



மட்டக்களப்பு மாவட்டம், களுவாஞ்சிகுடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட எருவில் பகுதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் இளைஞர் ஒருவர் பலியாகியுள்ளார் என்று களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துச் சம்பவம் நேற்று அதிகாலை 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

நண்பர் ஒருவரின் பிறந்தநாளுக்குச் சென்றுவிட்டு வருகை தந்த நிலையில் வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதி அருகில் இருந்த மரம் ஒன்றில் மோதுண்டதில் இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

இதன்போது மோட்டார் சைக்கிளில் பயணித்த இரு இளைஞர்களும் பலத்த காயங்களுடன் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

வைத்தியசாலைக்குச் செல்லும் வழியில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். மற்றைய இளைஞர் மட்டக்களப்பு போதனை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

எருவில் கிராமத்தைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞரே சம்பவத்தில் உயிரிழந்தார்.

மேற்படி இளைஞரின் சடலம் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை களுவாஞ்சிகுடிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## தவறுக்கு வருந்துகின்றோம்

நேற்றைய “மாலை முரசு“ இதழின் 5ஆம் பக்கத்தில், “சாந்தனின் இறுதிக்கிரியை இடம்பெற்று ஆரம்பமான புகழுடலின் இறுதி ஊர்வலம்“ என்ற தலைப்பில் வெளியாகியிருந்த படங்களில் ஒன்று தவறானது. வேறொரு நிகழ்வில் எடுக்கப்பட்ட படமே அது. தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடம்பெற்ற அந்தத் தவறுக்கு வருந்துகின்றோம். (ஆ – ர்)

# தேசியத்துக்கு முன்னிலை வழங்குபவரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்!

## பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவிப்பு



"தேசியத்துக்கும், பௌத்த மதத்துக்கும் முன்னுரிமை வழங்கும் நபரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம். பொருளாதார பாதிப்புக்கு மத்தியில் நாட்டின் இறை யாண்மையை சவாலுக்குட்படுத்தும் செயற்பாடுகளுக்கு ஒரு போதும் ஒத்துழைப்பு வழங்க போவதில்லை."

– இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

குருநாகல் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துக் கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப் பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் ஆளும் தரப்பில் இருந்து விலகி நாடாளுமன் றத்தில் சுயாதீனமாக செயற்படவுள்ளனர் என வெளியா கியுள்ள செய்திகள் அடிப்படையற்றவை. நாடாளுமன்றத் தில் பொதுஜன பெரமுனவின் வசம் பெரும்பான்மை பலம் உள்ள நிலையில் எதிர்க்கட்சி பக்கம் செல்ல வேண்டிய தேவை எமக்கில்லை.

ஜனாதிபதி தேர்தல் தற்போதைய பிரதான பேசுபொருளாக காணப்படுகிறது. அரசமைப்புக்கு அமைய ஜனாதிபதித் தேர் தலை நடத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ள நிலை யில் பொதுத்தேர்தலை நடத்துமாறு பொதுஜன பெரமுன வலியுறுத்தியுள்ளதாக எதிர்த் தரப்பினர் குறிப்பிடுவது அடிப் படையற்றது.

ஜனாதிபதி தேர்தலுக்கு முன்னர் பொதுத்தேர்தலை நடத்து மாறு நாங்கள் வலியுறுத்தவில்லை. எந்தத் தேர்தலை நடத் தினாலும் அதனை எதிர்கொள்ள தயாராகவுள்ளோம்.

பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் ஒருவரை ஜனாதிபதி யாகக் களமிறக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருக்கி றோம். தேசியத்துக்கும், பௌத்த மதத்துக்கும் அதேபோல் ஏனைய மதங்களுக்கும் முன்னுரிமை வழங்கும் நபரை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்போம்.

பொருளாதார மீட்சி என்று குறிப்பிட்டுக் கொண்டு தேசிய வளங்களை தனியார் மயப்படுத்தும் செயற்பாடுகளை அரசாங் கம் முன்னெடுத்தால் அதற்கு ஒருபோதும் ஒத்துழைப்பு வழங்க மாட்டோம். நட்டமடையும் அரச நிறுவனங்களைத் தேசிய பங்குடையுடன் நிர்வகிக்க வேண்டும் என்பதில் உறுதி யாகவுள்ளோம்." – என்றார்.

# வடக்கு மீனவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் பேரணி



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு கோரி, வடக்கு மாகாண மீனவர்கள் இன்று யாழ்ப்பாணத்தில் பேரணி நடத்தவுள்ளனர் என்று அகில இலங்கை மீனவர் மக்கள் தொழிற்சங்க இணைப்பாளர் அன்னலிங்கம் அன்னராசா தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடத்திய ஊடகவியலா ளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

வடக்கு மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெறும் இந்தப் பேரணியில் அனைத்து தரப்பினரையும் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்தார்.

இன்று காலை 10:30 மணிக்கு யாழ். மாவட்ட செயலகத் தின் முன்பு ஆரம்பமாகும் இந்தப் பேரணில் இலங்கை ஜனாதிபதிக்கான மகஜரை வடக்கு மாகாண ஆளுநர் ஊடாகவும், இந்தியப் பிரதமருக்கான மகஜரை இந்தியத் துணைத் தூதுவர் ஊடாகவும் வழங்கவுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

# எரிபொருள் விலையில் திருத்தம்



எரிபொருள் விலையில் நேற்று நள்ளிரவு முதல் திருத் தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் விலை 09 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒக்டேன் 95 ரக பெற்றோல் லீற்றர் ஒன்றின் புதிய விலை 447 ரூபாவாக குறைக்கப்பட்டுள்ளது.

சுப்பர் டீசல் லீற்றர் ஒன்றின் விலை 10 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, ஒரு லீற்றர் சுப்பர் டீசல் 458 ரூபாவாக விற்பனை செய்யப்படுகின்றது.

அத்துடன், மண்ணெண்ணெய் லீற்றர் ஒன்றின் விலை 05 ரூபாவினால் குறைக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 257 ரூபா வுக்கு விற்பனை செய்யப்படுகின் றது.

அத்துடன், ஒக்டேன் 92 ரக பெற்றோலின் விலை மற்றும் ஒட்டோ டீசலின் விலையில் மாற்றம் இல்லை எனவும் அறி விக்கப்பட்டுள்ளது.

# விபத்தில் அருட்தந்தை பலி!



வீதி விபத்தில் அருட்தந்தை ஒருவர் பரிதாபகரமாகப் பலியாகியுள் ளார்.

மன்னார், அடம்பன் சந்தியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் அருட்தந்தை மரிசால் டிலான் (வயது 35) என்பவரே உயிரிழந்துள்ளார்.

டிப்பர் மோதி படுகாயமடைந்த அருட்தந்தை, மன்னார் வைத்தியசா லைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வெளிப்படுத்தினார்.

மற்றவர்களைக் காணவில்லை. ஏன்? பக்கத்து வீட்டுக்காரருடன் வீணாகப் பகைப்பானேன் என்று எண்ணமோ?

முன்னாள் ஆயுதக் குழுவான ஒரு கட்சி மட்டும் பங்குபற்றாமைக்குக் காரணம் எனக்குப் புரிகிறது. அது இப்போது பேசுவதற்குரிய விடயமும் அல்ல. மற்றவர்கள் ஏன் வரவில்லை? புதுடெல்லிக்குத் தான் வெளிச்சம்...!

+ + +

அரசியல் விவகாரம் நீதிமன்றுக்குச் செல்லலாம். ஆனால் நீதிமன்ற விவகாரத்தை அரசியலாக்கக் கூடாது. அரசியலாக்கினால் சிக்கல்தான் வரும். நீதிமன்ற அவமதிப்பு என்ற பெயரில் மீள முடியாத தொல்லை தேடி வதைக்கும்.

நீதிமன்றத்துடன் சம்பந்தப்பட்ட விடயங்களைச் செய்தியாக்கும் போதும் சரி, அதை அரசியலாக்கும் போதும் சரி, கொஞ்சம் உஷாராகவும், உறுதியான ஆதாரங்களோடும் முன்னெடுக்க வேண்டும். இல்லையேல் சிக்கல்தான்.

வழமையாக அரசியல் விடயங்களை தொலைக்காட்சியில் கண்ட மாதிரிக்கு – சகட்டுமேனிக்கு – எடுத்து விடுகின்றமை போல, வழக்கு விவகாரங்களில் வாய்க்கு வந்தபடி விடயங்களை எடுத்து விடக்கூடாது. விட்டால் மாட்டிக் கொள்ள வேண்டி வரும்.

தமிழரசுக் கட்சி வழக்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் நடந்தது. கடந்த 15 ஆம் திகதி வழக்குத் தாக்கலாகி இடைக்காலத் தடை உத்தரவாகக் கட்டாணை வழங்கப்பட்டது.

கடந்த 29ஆம் திகதி முதல் தவணை. எதிராளிகளில் ஒருவராக வழக்கில் குறிப்பிடப்பட்ட ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரனுக்கு வழக்குத் தொடர்பில் அழைப்பாணை எதுவும் வழங்கப்பட்டிருக்கவில்லை. அச்சமயத்தில் அவரின் தாயார் இறந்து மரண வீட்டில் அவர் மும்முரமாக இருந்தார். இவற்றால் அவர் அந்த வழக்குக்குப் போகவும் இல்லை, தன் சார்பில் தமது சட்டத்தரணியையோ, பிரதிநிதியையோ அவர் நீதிமன்றுக்கு அனுப்பவும் இல்லை. அவர் சார்பில் முன்னிலையாகின்றனர் என எந்தச் சட்டத்தரணியும் நீதிமன்றத்தில் பெயர் பதியவும் இல்லை.

அப்படி இருக்கையில், ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் சார்பில் சட்டத்தரணி ஒருவர் நீதிமன்றத்தில் முன்னிலையாகிக் கேட்டுக்கொண்டதனால்தான் வழக்கு ஏப்ரல் வரை ஒத்திவைக்கப்பட்டது, இல்லையேல் 14 நாள்கள்தான் வழக்குத் தள்ளி வைக்கப்பட்டிருக்கும் என்ற சாரப்பட யாழிலிருந்து வெளியாகும் இரண்டு நாளிதழ்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன என்பதை சுமந்திரன் தரப்பு மிக 'சீரியஸாக' கவனத்தில் எடுத்துக் கொண்டிருக்கின்றது என அறிய வந்தது.

அத்தோடு இன்னொரு அரசியல் பிரமுகரும் தொலைக்காட்சி ஒன்றில் தோன்றி, சுமந்திரன் தரப்பின் கோரிக்கையால் தான் வழக்கு நீண்ட திகதிக்குத் தள்ளிப் போனதாக தன் வாயாலேயே வழமை போல நடிகர் திலகம் பேச்சு பேசியிருக்கின்றார் என்றும் கூறப்படுகின்றது. இதுவும் சுமந்திரன் தரப்பில் முக்கியமாகக் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தாம் வழக்குப் பக்கமே வராத நிலையில் – சம்பந்தப்படாத நிலையில் – தம்மை வைத்து நீதிமன்ற விவகாரத்தை அரசியலாக்கும் செய்தி நிறுவனங்களுக்கும் அரசியல்வாதிக்கும் எதிராக நீதிமன்ற அவமதிப்பு முறைப்பாட்டை செய்ய சுமந்திரன் தரப்பு தயாராகின்றது என்று தெரிகிறது.

நேற்று மாலை ஜனாதிபதி சட்டத்தரணி கனகேஸ்வரனுடன் சுமந்திரன் சட்ட ஆலோசனையில் இருந்தார் என ஒரு வட்டாரம் தெரிவித்தது. இந்த விடயமும் ஆலோசிக்கப்பட்டதோ தெரியவில்லை.

சட்டச் சிக்கல் வந்தால் பல சமயங்களிலும் அது காலைச் சுற்றிய பாம்பு, கடிக்காமல் விடாது, கவனமாக இருக்க வேண்டும்.

முன்னர் வடக்கு மாகாண சபை விடயத்தில் நீதிமன்ற உத்தரவுடன் நீதியரசர் விக்னேஸ்வரன் விளையாட முற்பட்ட போது இப்படிக் காலைச் சுற்றிய பாம்பு என்று விவரித்திருந்தேன்.

அப்போது வழக்குத் தொடுத்த டெனீஸ்வரனை ஊடகவியலாளராக நாங்களும் சேர்ந்து, அதிகம் வற்புறுத்தி, கடைசி நேரத்தில் நீதிமன்ற அவமதிப்பு முறைப்பாட்டை அவரைக் கொண்டு கைவாங்கச் செய்தமையால் பிரச்சினை சுமூகமாக தீர்ந்தது. இல்லையேல் நெருக்கடிதான்.

ஆனால் இந்த விடயத்தில் சுமந்திரன் காலை முன் வைத்தால் மேற்படி இரண்டு ஊடகங்களுக்கும் அரசியல்வாதிக்கும் சிக்கல் தவிர்க்க முடியாததாகவே இருக்கும் என்பதுதான் என் கணிப்பு.

தமிழரசுக் கட்சியின் வழக்கையொட்டி முற்கூட்டியே நான் கூறிய 'அட்வைஸ்'தான் இதிலும்.

நேரத்துடனே முறைப்பாடு செய்யக் கூடியதரப்புடன் சமரசம் செய்துகொண்டால் சிக்கல் இல்லை. அவ்வளவுதான்.

'தமிழரசுக் கட்சி விடயத்தில் விவகாரம் நீதிமன்றத்துக்குப் போனால் நெருக்கடி அதிகமாகும், சமாளிக்க முடியாது' என்று குறிப்பிட்ட பெரியவரிடம் நானே தொலைபேசியில் தெரிவித்திருந்தேன். ஒரு வகையில் அது என் ஆலோசனை. இன்னொரு வகையில் முன்னெச்சரிக்கை பற்றிய தெரிவிப்பு.

"வழக்கு போட்டுப் பார்க்கட்டும். நீதிமன்றத்தில் வழக்காடிப் பார்க்கலாம்" என்று சவால் பாணியில் பேசினார் பெரியவர்.

ஆனால் கடைசியில், முதல் தவணையின் போதே ஒட்டுமொத்தமாக கட்சியின் முழு நிர்வாகமும் சரணாகதி பாணியில் பதில் தந்ததுதான் நடந்தது.

இந்த விடயத்திலும் இன்று நான் சுட்டிக் காட்டியதும் துள்ளி குதிப்பார்கள். 'முடியுமானால் நீதிமன்றத்தில் பார்ப்போம்' என்று முஷ்டியைத் தூக்கி காட்டினாலும் காட்டுவார்கள்.

அரசியல் நடிப்பு – சகட்டு மேனி கப்ஸா பேச்சு – நீதிமன்றத்திற்குச் சரி வராது. புரிந்துகொண்டால் சரி.

## பிரபாகரனின் வீட்டு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலி செலுத்தப்பட்டது.

சாந்தனின் புகழுடல் தாங்கிய இறுதி ஊர்வலம் நகர்ந்து வல்வெட்டித்துறை ஆலடியில் உள்ள பிரபாகரனின் பூர்வீக வீட்டு வளாகத்திலும் சிறிது நேரம் தரித்து நின்று அஞ்சலி செலுத்தப்பட்டது.

இதன்போது சாந்தனின் புகழுடலுக்கு சிவப்பு, மஞ்சள் நிறக் கொடிகள் போர்த்துப் பலரும் அஞ்சலி செலுத்தினர்.

## மாவீர் துயிலும் இல்ல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் கைதாகி 33 வருடங்கள் சிறையில் இருந்து பின்னர் விடுவிக்கப்பட்டு திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஈழத்தமிழரான சாந்தன் என்று அழைக்கப்படும் தில்லையம்பலம் சுதேந்திரராஜா, பல போராட்டங்களின் பின்னர் கடந்த 28 ஆம் திகதி தாயகம் திரும்ப இருந்த நிலையில், சென்னை ராஜீவ் காந்தி அரச வைத்தியசாலையில் மாரடைப்பால் அன்று காலை உயிரிழந்தார்.

சாந்தனின் இழப்பு தமிழர்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும் பேரிழப்பையும் ஏற்படுத்தியிருந்தது.

சாந்தன் தாயகம் திரும்புவார் என்று தமிழ் மக்கள் எதிர்பார்த்திருந்த நிலையில், அவர் உயிரிழந்த நிலையில் புகழுடலாகத் தாயகத்துக்குக் கொண்டு வரப்பட்டார்.

கடந்த இரு நாட்களாகப் பல்வேறு இடங்களிலும் மக்கள் அலைகடலெனத் திரண்டு கண்ணீர் மல்க சாந்தனின் புகழுடலுக்கு அஞ்சலி செலுத்தினர்.

யாழ். வடமராட்சி – உடுப்பிட்டியில் உள்ள சாந்தனின் சகோதரியின் வீட்டில் நேற்றுப் பகல் இறுதிக்கிரியைகள் நடைபெற்றன. அதன்பின்னர் சாந்தனின் புகழுடல் தாங்கிய இறுதி யாத்திரை ஆரம்பமானது.

வல்வெட்டித்துறையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் வீட்டு வளாகத்தில் நேற்று மாலை மக்களின் அஞ்சலிக்காகச் சாந்தனின் புகழுடல் வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து பல்லாயிரக் கணக்கான மக்கள் அணிவகுத்து வர சாந்தனின் புகழுடல் எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல மயான வளாகத்துக்கு எடுத்துவரப்பட்டது. இதன்போது வீதிகளில் திரண்டு மக்கள் தமது அஞ்சலியைச் செலுத்தினர்.

இறுதியாக எள்ளங்குளம் மாவீரர் துயிலும் இல்ல மயான வளாகத்தில் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர்கள், முன்னாள் போராளிகள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், அரசியல் கைதிகளின் உறவினர்கள், சமயத் தலைவர்கள், அரசியல் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பெருமளவிலானோரின் கண்ணீர் கதறலுடன் விபூதி போடப்பட்டு சாந்தனின் புகழுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.





# சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட பூச்சி கொல்லி மருந்துகள் சிக்கின!

## கற்பிட்டியில் கடற்படை மடக்கியது

(ரஸீன் ரஸ்மின்)

கற்பிட்டி, உச்சமுனை கடற்பகுதி ஊடாக சட்டவிரோதமான முறையில் கொண்டு செல்ல முயற்சித்த பூச்சிக் கொல்லி மருந்துகளுடன் சந்தேக நபர்கள் இருவர் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் 33 மற்றும் 44 வயதுடையவர்கள் எனவும் இவர்கள் கற்பிட்டி வன்னிமுந்தல் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

வடமேற்கு கடற்படை கட்டளையின் கடலோர பாதுகாப்பு கடற்படையினரால் கற்பிட்டி உச்சமுனை கடற்பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு டிங்கி இயந்திர படகுகளை சோதனை செய்த போதே இந்தப் பூச்சி கொல்லி மருந்துகள் கைப்பற்றுள்ளன.

இதன்போது, சட்டவிரோதமாக நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக தெரிவிக்கப்படும் 100 மில்லி லீட்டர் அளவுடைய 4000 பூச்சிக்கொல்லி மருந்து போத்தல்கள்ளும், 10 கிராம் அளவுடைய 6534 பூச்சிக்கொல்லி பக்கெட்டுகள் என்பனவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தக் கடத்தலுக்குப் பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் இரண்டு டிங்கி இயந்திர படகுகளும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர்களுசட்டவ-
ிரோதமாக கொண்டுவரப்பட்ட

பூச்சி கொல்லி மருந்துகள் சிக்கின!

ம், அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பூச்சி கொல்லி மருந்து போத்தல்கள் மற்றும் பக்கட்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# ஜே.வி.பியின் கயிறு!

‘எல்லோரும் ஏறி விழுந்த நொண்டிக் குதிரையில் சக்கடத்தார் தானும் ஏறி விழுந்தாராம்’ - என்று ஒரு பேச்சு மொழி உண்டு.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று சூளுரைத்து, அந்த ஜனாதிபதியைத் தேர்வு செய்யும் தேர்தல்களில் போட்டியிட்டு, வென்ற பின்னரும் அதைச் செய்யாமல் போன மற்றைய ஜனாதிபதிகள் மற்றும் அவர்களின் கட்சிகளின் வரிசையில் ஜே.வி.பியை உள்ளடக்கிய தேசிய மக்கள் சக்தியும் இடம் பெற முயற்சிக்கின்றது போலும்.

வரும் ஜனாதிபதி தேர்தலில் அக்கட்சியின் தலைவர் அனுரகுமார திஸநாயக்க தப்பித்தவறி வெற்றி பெற்றாலும் கூட, முந்தைய தேர்தல்களில் இதே போன்று வாக்குறுதி தந்து, தேர்தலில் வென்ற பின்னர் அதை நிறைவேற்றாமல் போன இலங்கையின் முன்னைய ஜனாதிபதிகள் சந்திரிகா, மஹிந்த, மைத்திரி மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க போன்று இவரும் கூட - அனுரகுமார திஸநாயக்கவும் கூட - இத்தேர்தலில் வென்று ஜனாதிபதியானாலும் இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பார் என்று நம்புவதற்கு இடமே இல்லை.

1978 இல் கொண்டுவரப்பட்ட அரசமைப்பின் கீழ் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை அறிமுகம் செய்யப்பட்டது. 45 வருடங்களுக்கு மேல் அது நீடிக்கின்றது. அதை நீக்குவது குறித்து கடந்த 30 ஆண்டுகளாக இலங்கை அரசியல் அரங்கில் பேசப்பட்டாலும், அது சாத்தியமாகவே இல்லை என்பதுதான் நமது அனுபவம்.

ஜனாதிபதிகள் சந்திரிகா, மஹிந்த, மைத்திரி, ரணில் எல்லோருமே இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று முதல் தடவை தேர்தலில் போட்டியிட்டபோதே எழுத்தில் மக்களுக்கு உறுதியளித்தவர்கள்தான்.

அப்படி உறுதியளித்து விட்டுத்தான், இரண்டு தடவைகள் இந்தப் பதவியை வகித்தனர் சந்திரிகாவும் மஹிந்தரும். இதில் மஹிந்தர் இன்னொரு படி மேலே போய் மூன்றாவது தடவையும் ஜனாதிபதியாவதற்கான தேர்தலில் போட்டியிட்டார் என்பதும் கவனிக்கப்பட வேண்டும்.

இப்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை தங்களின் தேசிய மக்கள் சக்தி ஆட்சியில் நீக்கப்படும் என ஜே.வி.பி. பிரமுகர் ரில்வின் சில்வா கூறுகின்றார்.

2005 நவம்பர் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ முதலாவது ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்டபோது அவருடன் உடன்பாடு செய்து அவரது வெற்றிக்காக கூட்டமைத்துச் செயற்பட்டது ஜே.வி.பி.

அப்போது மஹிந்த ராஜபக்ஷ அந்தத் தேர்தலில் வென்றால் அந்த ஒரு தடவையுடன் நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை நீக்கப்படும் எனத் தேர்தலுக்கு முன்னரே மஹிந்தவுடன் எழுத்தில் உடன்பாடு செய்தது ஜே.வி.பி.

ஆனால் அந்தக் கூட்டினால் அதை நிறைவேற்ற முடியவில்லை. நிறைவேற்ற அதிகாரத்தை ருசிப்பவர் அதை இலகுவில் கைவிட இணங்கார். அது பதவி சுகம் பற்றிய மனித இயல்பு.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்க மஹிந்தவுடன் இணக்கம் கண்ட ஜே.வி.பி. தேர்தலில் மஹிந்த வென்று ஜனாதிபதியானமையுடன் அதனைப் பின்பலமாக பாவித்து, அதுவரை 17 ஆண்டுகள் இணைக்கப்பட்டிருந்த தமிழர் தாயகத்தை - வடக்கையும், கிழக்கையும் - பிரிக்கும் வேலையைத்தான் நீதிமன்றம் மூலம் ஒப்பேற்றியது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியில் முதலில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, ரணசிங்க பிரேமதாஸ, டி.பி. விஜயதுங்க ஆகிய மூவருக்கும் பின்னர் வந்த ஜனாதிபதிகள் சந்திரிகா, மஹிந்த, மைத்திரிபால, கோட்டாபய, ரணில்விக்கிரமசிங்க ஆகியோரில் கோட்டாபயவைத் தவிர மற்றைய எல்லோருமே அந்த ஜனாதிபதி ஆட்சி முறைமையை ஒழிப்போம் என்று வாக்குறுதி அளித்துத்தான் - எழுத்து மூலம் மக்களுக்கு உறுதி அளித்துத்தான் - ஆட்சிக்கு வந்தார்கள். பின்னர் அதை அடியோடு மறந்தும் போனார்கள்.

இந்த வரிசையில் மைத்திரிபால சிறிசேன மட்டும்தான் பதவியில் இருந்தபோது தமது பதவிக்காலத்தை ஒரு வருடம் குறைக்கவும், அதிகாரங்கள் சில வற்றை கைவிடவும் இணங்கி நடவடிக்கை எடுத்தார். கடைசிக் கட்டத்தில்தான் கைவிட்ட ஒரு வருட ஆட்சியை மீளப்பெற அவர் முயன்றாராயினும் அது சரிவரவில்லை.

அந்த வரிசையில், நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிக்கும் கயிறைத் தனது பங்குக்கு ஜே.வி.பி. இப்போது விடுகின்றது. அவ்வளவுதான்.






# தமிழக வளர்ச்சிக்கான நிதியினை கொள்ளை அடிக்க விடமாட்டேன்!

## சென்னையில் பிரதமர் மோடி உரை

“தமிழகத்தின் வளர்ச்சிக்காக அளிக்கப்படும் பணத்தை யாரும் கொள்ளையடிக்க நான் விடமாட்டேன். எந்தப் பணத்தை நீங்கள் (தி.மு.க) கொள்ளை அடிக்கிறீர்களோ, கொள்ளை அடித்திருக்கிறீர்களோ, அந்தப் பணம் வசூலிக் கப்பட்டு, தமிழக மக்களுக்காகவே செலவழிக்கப்படும். இது மோடியின் உத்தரவாதம்.”

– இவ்வாறு சென்னையில் இடம்பெற்ற பா.ஜ.க. பொதுக் கூட்டத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

சென்னை நந்தனம் ஒய்.எம்.சி.ஏ. மைதானத்தில் பிரதமர் மோடி தலைமையில் பா.ஜ.க. பொதுக் கூட்டம் நேற்று நடை பெற்றது. இந்தக் கூட்டத்தில் பிரதமர் உரையாற்றுகையில்,

“ஒவ்வொரு முறை நான் சென்னைக்கு வரும்போது, இங்குள்ள தமிழர்களால் எனக்கு சக்தி உண்டாகிறது. உயிர்ப் பும், துடிப்பும் நிரம்பியிருக்கும் இந்த சென்னை நக ருக்கு வருவது மிக இனிமையான அனுபவமாக இருக் கிறது.

மத்திய பா.ஜ.க. அரசு தமிழகத்தின் வளர்ச்சிக்காகவும், முன்னேற்றத்துக்காகவும் கச்சைக் கட்டிக் கொண்டு பணி யாற்றி வருகிறது. இதற்காக, மத்திய அரசு பல திட்டங்களுக் கான தொகையை நேரடியாக பயனாளிகளக்கு அனுப்பி வருகிறது. லட்சக்கணக்கான கோடி ரூபாய் அளவிலான ஆதாயங்கள், இப்போது நேரடியாக மக்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக சென்றடைகிறது. இதுதான் தி.மு.கவுக்கு மிகப் பெரிய வருத்தம். கழிவறை, எரிவாயு இணைப்பு, குடிநீர் இணைப்பு, ரயில் வழித்தடங்கள், வீதி கள், இலவச காப்பீட்டுத் திட்டங்கள், நெடுஞ்சாலைகள், துறை முகங்கள் என அனைத்து துறைகளிலும் பணிகள் நடந்து வருகிறது.

இந்த வளர்ச்சித் திட்டங்களுக்கான பணிகளுக்கான லட்சக்கணக்கான கோடி ரூபாயை கொள்ளையடிக்க முடியா மல் இருக்கிறதே என்பதுதான் தி.மு.கவினருக்கு இருக்கும் பெரும் சிக்கல். இந்த விஷயத்தில் ஒரு குடும்பம் முழுவதுமே பயங்கரமான எரிச்சலில் இருக்கிறது. பணம்தான் கிடைக்க வில்லை, குறைந்தபட்சம் அந்த திட்டத்தை நாங்கள்தான் செய்தோம் என்று தம்பட்டம் அடித்துக்கொள்ளலாம் என்று ஸ்டிக்கரை ஒட்டிக் கொள்கின்றனர். ஆனால், பாவம் அதி லும்கூட அவர்களுக்கு வெற்றி கிடைக்கவில்லை.

நான், தி.மு.கவினருக்கு ஒன்றை மட்டும் கூறிக்கொள்ள விரும்புகிறேன். தமிழகத்தின் வளர்ச்சிக்காக அளிக்கப்படும் பணத்தை கொள்ளையடிக்க விடமாட்டேன். எந்தப் பணத்தை நீங்கள் கொள்ளை அடிக்கிறீர்களோ, கொள்ளை அடித்தி ருக்கிறீர்களோ, அந்தப் பணம் வசூலிக்கப்பட்டு, தமிழக மக்களுக்காகவே செலவழிக்கப்படும். இது மோடியின் உத்தர வாதம்.” – என்றார்.

# முருகன், ரொபர்ட் பயஸ், ஜெயக்குமாரை இலங்கை அனுப்ப விரைவு நடவடிக்கை

## சென்னை உயர் நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு கோரிக்கை



முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடுவிக்கப்பட்டு முகாமில் உள்ள முருகன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக்குமாரை இலங்கை அனுப்புவதற்கான அனுமதியை மத்திய அரசு விரைவாக வழங்க உத்தரவிட வேண்டும் என்று தமிழக அரசு சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நோய் வாய்ப்பட்டுள்ள தனது தாயை கவனிப்பதற்காக தன்னை இலங்கைக்கு அனுப்பி வைக்க உத்தரவிடக் கோரி சாந் தன் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் ஆர்.சுரேஷ் குமார், குமரேஷ் பாபு ஆகியோர் அடங் கிய அமர்வில் கடந்த முறை விசார ணைக்கு வந்தபோது, சாந்தன் உயிரிழந் துள்ளார் என தெரிவிக்கப்பட்டு, அது தொடர்பான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன. இந்த வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், சாந்தனின் உடலை விரைவாக இலங்கைக்கு அனுப்புவதற் கான பணிகளை மேற்கொள்ள உத்தர விட்டு,அதுதொடர்பானஅறிக்கையைதாக் கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு, நீதிபதிகள் சுரேஷ்குமார் மற்றும் குமரேஷ் பாபு அமர்வு முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, உயர் நீதிமன்ற உத்தரவின் படி, சாந்தனின் உடல் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டுவிட்டதாக அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இதனைய டுத்து, சாந்தனின் மனுவை முடித்து வைத்து நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

அப்போது தமிழக அரசு தரப்பில், ராஜீவ் காந்தி கொலை வழக்கில் விடு தலையான இலங்கை தமிழர்களான முருகன், ரொபர்ட் பயஸ் மற்றும் ஜெயக் குமார் திருச்சி முகாமில் இருக்கின்ற னர். தங்களை இலங்கைக்குத் திரும்ப அனுப்பக்கோரி உள்துறை அமைச்சகத் துக்கு அவர்கள் விண்ணப்பித்துள்ளனர். அந்த கோரிக்கை நிலுவையில் உள்ள நிலையில் மூவரையும் இலங்கைக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை விரைவாக மேற்கொள்ள மத்திய அர சுக்கு உத்தரவிட வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டது.

அப்போது, மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல். சுந்த ரேசன், மூவரும் தங்களுக்கான ஆவ ணங்களை வழங்கக்கோரி இலங்கை து தரகத்தை நாடினார்களா என்பது குறித்து தெரியவில்லை என்று கூறினார்.

இதையடுத்து, மூன்று பேர் தொடர்பாக இந்த வழக்கில் எந்த உத்தரவும் பிறப் பிக்க இயலாது எனக் கூறிய நீதிபதிகள், மூவரும் தனியாக மனு தாக்கல் செய்தால் பரிசீலிக்கப்படும் என தெரிவித்தனர்.

# பாகிஸ்தானின் 24 ஆவது பிரதமராக ஷெபாஷ் ஷெரீப் பதவியேற்றார்



பாகிஸ்தானின் புதிய பிரதமராக ஷெபாஷ் ஷெரீப் (வயது 72) நேற்று பதவியேற்றார். அவருக்கு அந்த நாட்டு ஜனாதிபதி ஆரிப் ஆல்வி பதவிப் பிரமாணம் செய்து வைத்தார்.

பாகிஸ்தான் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வாக்கெடுப்பில் இம்ரான் கான் கட்சியைச் சேர்ந்த வேட்பாளர் உமர் அயூப் கான் 92 வாக்குகள் பெற்ற நிலையில், ஷெபாஷ் ஷெரீப் 201 வாக்குகள் பெற்று வெற்றிபெற்றார்.

இதையடுத்து புதிய பிரதமராக அவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். இதன் தொடர்ச்சியாக, நேற்று அவர் பதவி ஏற்றுக் கொண்டார். அவருக்கு ஜனாதிபதி ஆரிப் ஆல்வி பதவிப் பிரமாணமும் இரகசிய காப்புப் பிரமாணமும் செய்துவைத்தார். ஜனாதிபதி மாளிகையில் இந்த பதவியேற்பு விழா நடைபெற்றது.

இந்த விழாவில், பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சித் தலைவர் நவாஸ் ஷெரீப், பாகிஸ்தான் மக்கள் கட்சித் தலைவர்கள் ஆசிப் சர்தாரி, பிலாவல் பூட்டோ சர்தாரி, பஞ்சாப் முதல்வர் மர்யம் நவாஸ், சிந்து முதல்வர் முராத் அலி ஷா, பலுசிஸ்தான் முதல்வர் சர்பராஸ் புக்தி, பல்வேறு நாடுகளின் தூதர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

பாகிஸ்தான் பிரதமராக ஷெபாஷ் ஷெரீப் பதவியேற்பது இது இரண்டாவது முறை. ஏற்கனவே, ஏப்ரல் 2022 - ஆகஸ்ட் 2023 வரை 16 மாத காலம் அவர் பிரதமராக இருந்துள்ளார்.

இம்முறை, ஷெபாஷ் ஷெரீபுக்கு பாகிஸ்தான் மக்கள் கட்சி, முடஹித்தா குவாமி இயக்கம் -பாகிஸ்தான், இஸ்டேகம், பாகிஸ்தான் கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-க்யூ, பலுசிஸ்தான் அவாமி கட்சி, பாகிஸ்தான் முஸ்லிம் லீக்-ஜியா, தேசிய கட்சி ஆகிய 7 கட்சிகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் 8 ஆம் திகதி பாகிஸ்தானில் பொதுத் தேர்தல் நடைபெற்றது. மொத்தம் 265 இடங்கள். இவற்றில் வெற்றிபெற்று ஆட்சி அமைக்க ஒரு கட்சிக்கு 133 இடங்கள் தேவை. தற்போது சிறையில் அடைக்கப்பட்டிருக்கும் முன்னாள் பிரதமர் இம்ரான் கானின் பாகிஸ்தான் தெஹ்ரீக் ஏ இன்சாப் கட்சி 93 இடங்களில் வெற்றி பெற்றது.

முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லீம் லீக் - நவாஸ் கட்சி 75 இடங்களிலும், பாகிஸ்தான் மக்கள் கட்சி 54 இடங்களிலும், எம்க்யூஎம் கட்சி 17 இடங்களிலும் வெற்றி பெற்றன.

# காசாவில் உடனடி யுத்த நிறுத்தத்திற்கு ஆஸி - மலேசிய தலைவர்கள் அழைப்பு





இஸ்ரேல் ஹமாஸ் மோதல்கள் காரணமாக உருவாகியுள்ள பிராந்திய பதற்றங்களை தணிப்பதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய மற்றும் மலேசிய தலைவர்கள் உடனடி யுத்த நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

மெல்பேர்னில் இடம்பெறும் விசேட ஆசியான் மாநாட்டின் போது இருவரும் சந்தித்துக் கொண்டவேளை இந்த கருத்தினை வெளியிட்டுள்ளனர்.

அவுஸ்ரேலிய பிரதமர் அன்டனி அல்பெனிசும் மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிமும் இணைந்து இந்த வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இதேவேளை, காசாவில் உள்ள அனைத்து பணயக் கைதிகளும் விடுதலை செய்யப்படவேண்டும் எனவும் அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதன்போது இஸ்ரேலிற்கும் பலஸ்தீனத்திற்கும் இடையிலான சர்ச்சைக்குரிய விடயங்கள் குறித்து பேசவிரும்பவில்லை. மாறாக பொது உடன்பாடு காணப்படும் உடனடி யுத்த நிறுத்தம் குறித்து பேசவிரும்புகின்றேன் என மலேசிய பிரதமர் அன்வர் இப்ராஹிம் தெரிவித்துள்ளார்.

இந்த மாநாட்டின் இறுதியில் காசா குறித்த அறிக்கையொன்றை வெளியிடுவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன எனினும் மலேசியாவும் ஹமாசும் கடுமையான நிலைப்பாட்டை வலியுறுத்தியுள்ளன.

எனினும் பிலிப்பைன்ஸ் மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் வேறுபட்ட நிலைப்பாட்டை கொண்டுள்ளன.

இதேவேளை, ஒக்டோபர் ஏழாம் திகதிக்கு பின்னர் காசாவில் காணப்படும் மோசமான மனிதாபிமான நிலை குறித்து அவுஸ்ரேலிய மலேசிய தலைவர்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.

இஸ்ரேல் மீதான தாக்குதலை கண்டிக்காத அவர்கள் உடனடி யுத்த நிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ளனர்.

அத்துடன், காசாவிற்கான பாதுகாப்பான தடையற்ற தொடர்ச்சியான மனிதாபிமான உதவிகளுக்கு அவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.



# 3,440 கிலோ கிராம் பீடி இலைகள் புத்தளத்தில் கடற்படையினால் மீட்பு

(ரஸீன் ரஸ்மின்)



புத்தளம் – நுரைச்சோலை , இளந்தையடி கடற்பிரதேசத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகை பீடி இலைகள் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் சந்தேகத்தின் பேரில் ஒருவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 29 வயதுடையவர் எனவும், இவர் நுரைச்சோலை பகுதியைச் சேர்ந்தவர் எனவும் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

வடமேற்குக் கடற்படைக் கட்டளையின் கடலோர பாதுகாப்பு கடற்படையினரால் இளந்தையடி கடற்பிரதேசத்தில் முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இந்த பீடி இலைகள் கைப்பற்றுள்ளன.

இளந்தையடி கடற்பிரதேசத்தில் சந்தேகத்திற்கு இடமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 111 பார்சல்களை கடற்படையினர் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது, 111 பார்சல்களிலும் 3,440 கிலோ கிராம் பீடி இலைகள் இருந்துள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கையின் பல்வேறு பகுதிகளுக்கும் விநியோகிக்கும் நோக்கில் இந்த பீடி இலைகள், கடல்மார்க்கமாகக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனத் தாம் சந்தேகிக்கின்றனர் எனக் கடற்படையினர் குறிப்பிட்டனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர், கைப்பற்றப்பட்ட 3,440 கிலோ கிராம் பீடி இலைகள் அடங்கிய பார்சல்களுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக கட்டுநாயக்க சுங்க அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் எனவும் கடற்படையினர் மேலும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில மாதங்களில் கற்பிட்டி பிரதேசத்தில் பத்தலங்குண்டு, இப்பந்தீவு, கீரிமுந்தல், மாம்புரி, தேத்தாப்பொல, இளந்தையடி மற்றும் தளுவ உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சட்ட விரோதமாக நாட்டுக்கு கொண்டுவரப்பட்ட பல கோடி ரூபா பெறுமதியான பீடி இலைகள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கைக்கு சொந்தமான கடல் மற்றும் கரையோர பகுதியில் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்கும் வகையில் இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கொத்து, ப்ரைட் ரைஸ் விலை அதிகரிப்பு; நுகர்வோர் முன்னணி சட்ட நடவடிக்கை!



கொத்து, ப்ரைட் ரைஸ் உள்ளிட்ட உணவுப் பொருள்களின் விலைகளை அதிகரிக்க அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் மேற்கொண்டுள்ள தீர்மானத்திற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கவுள்ளதாக தேசிய நுகர்வோர் முன்னணி தெரிவித்துள்ளது.

தேசிய நுகர்வோர் முன்னணியின் தலைவர் அசேல சம்பத் இதனைத் தெரிவித்துள்ளார்.

சந்தையில், உணவுப்பொருள்களின் விலைகளை தன்னிச்சையாக தீர்மானிக்கும் அதிகாரம் தனியார் நிறுவனங்களுக்கு இல்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவ்வாறாயினும், மூலப்பொருள்களின் விலை அதிகரிப்பு காரணமாகவே, உணவுப் பொருள்களின் விலைகளை உயர்த்த நேரிட்டதாக அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, ஒரு கோப்பை தேநீர் ஐந்து ரூபாவினாலும், ஒரு கோப்பை பால் தேநீர் 10 ரூபாவினாலும், சிற்றுண்டிகள் 10 ரூபாவினாலும் அதிகரிக்கப்படுவதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், சோற்றுப்பொதி ஒன்று 25 ரூபாவினாலும் கொத்து மற்றும் ப்ரைட் ரைஸ் ஆகியன 50 ரூபாவினாலும் அதிகரிக்கப்படுகின்றன என அகில இலங்கை சிற்றுண்டிசாலை மற்றும் உணவக உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.



டாக்டர்
முரளி வல்லிபுரநாதன்

# மறந்து போன-மறைந்து போன சுயநிர்ணய உரிமைக் குரல்கள்!

ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் 55 ஆவது கூட்டத்தொடரின் போது ஐ.நா. மனித உரிமைகளுக்கான ஆணையாளர் வோல்கர் டர்க் இலங்கையில் புதிய பெயரில் தொடரும் பயங்கரவாத தடை சட்டம் மற்றும் இணைய சுதந்திரத்தை கட்டுப்படுத்தும் சட்டங்கள், அதிகரிக்கும் ஆயுதப்படையினரின் அதிகாரங்கள் மற்றும் வறுமை நிலை அதிகரிப்பு தொடர்பாக தனது கரிசனையை வெளிப்படுத்தி இருக்கிறார்.


“15 வருடங்கள் ஆகியும் பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட காணாமல் போனவர்கள் தொடர்பாக எந்த முன்னேற்றத்தையும் காணமுடியவில்லை’ என்றும், ‘காணமால் போனவர்கள் மற்றும் உள்நாட்டு போரில் இறந்தவர்களை நினைவு கூர்பவர்கள் மீது நிகழ்த்தப்படும் அடக்குமுறை’ பற்றியும் கவலை வெளியிட்டு இருக்கிறார்.

இறுதியாக, 2010 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றினால் தனிநபர் மீது சித்திரவதை மேற்கொண்டமைக்காகக் குற்றவாளியாக இனம் காணப்பட்ட நபர் பொலிஸ் மா அதிபராக நியமிக்கப்பட்டமையைக் கண்டித்துள்ளமையுடன் ஒட்டுமொத்தமாக இலங்கையில் வீழ்ச்சி அடைந்து வரும் மனித உரிமைகள் நிலைமையையும் தொடரும் தமிழர்கள் மீதான அநீதியையும்வர் வெளிப்படுத்தி இருக்கிறார்.

‘கடந்த வருடமும் ஆயுதப்படையினரால் – பிரதானமாக வடக்கு, கிழக்குப் பகுதியில் – பாலியல் வன்முறைகள் உட்பட பல வன்முறைகள் இடம்பெற்றன’ என ஐ.நா மனித உரிமைகளுக்கான ஆணையாளர் கூறுகிறார். அத்துடன், ‘நிலையான சமாதானமும் நல்லிணக்கமும் அடக்குமுறை சட்டங்கள் மூலம் பெறப்பட முடியாது’ என அவர் எச்சரித்து உள்ளார் .

ஆனால் தமிழ் தலைவர்கள் என்று கூறிக்கொள்வோர் நாட்டிலும் புலத்திலும் இவை தொடர்பில் வாய் மூடி மௌனிகளாக உள்ளனர்.

முன்பெல்லாம் ஒவ்வொரு வருடமும் ஈழத்தமிழரின் பிரச்சினைகள் ஐக்கிய நாடுகள் மனித உரிமை சபையில் எடுக்கப்படும் போதெல்லாம் நாட்டிலும் புலத்திலும் வாழும் தமிழ் தலைவர்கள் மற்றும் ஆர்வலர்கள் ஜெனீவா சென்று கோவில் திருவிழா போலப் பல விதமான போராட்டங்களை முன்னெடுப்பார்கள்.



மூன்று தசாப்த உள்நாட்டு போரின் பின்னர் 2009இல் ஆயுத போராட்டம் மௌனமாக்கப்பட்டதன் பின்னர் முதன்முறையாக தமிழரின் ஒட்டுமொத்த உரிமைப் போராட்டமும் மௌனிக்கப்பட்டது போன்ற ஒரு நிலை தற்போது உருவாகியுள்ளது.

ஒருபுறம், கடந்த காலங்களில் வெளிவேடம் போட்டுகொண்டு, புலம்பெயர் தமிழரை உசுப்பேற்றிப் பெறப்பட்ட நிதியில் ஜெனீவாவில் போராட்டங்களில் ஈடுபட்டிருந்த உலகத் தமிழர் பேரவை மற்றும் கனேடிய தமிழ் காங்கிரஸ் உட்பட பல அமைப்புகளின் உண்மை முகம் வெளிப்பட்டு அவர்கள் இப்போது ‘தமிழர் அதிகம் வாழும் வடக்கு – கிழக்கு பகுதியில் இருந்து ஆயுதப்படையினரை அகற்ற வேண்டாம்’ என்று கூறும் பௌத்த மத குருக்களுடன் இணைந்து மக்களைத் தெளிவுபடுத்தும் பயிற்சிப் பட்டறைகளை நடத்தி வருகின்றனர். மஹிந்தவுடன் இணைந்து மத நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயல்பவர்களுக்கு மஹிந்தவுக்கு எதிரான இனப்படுகொலைக் குற்றச்சாட்டுகளைத் தொடர்வது கடினமாக உள்ளது போலும்.

மறுபுறம் தமிழரசு கட்சி மீண்டும் தலைவர் தேர்தலை நடத்தத் தயார் என நீதிமன்றத்தில் தெரிவித்திருப்பதன் ஊடாகக் கடந்த காலங்களில் யாப்பை மீறி செயல்பட்டு இருப்பதை ஒப்புக்கொண்டிருப்பதுடன் உட்கட்சி குழப்பங்களால் அந்த கட்சி ஸ்தம்பித நிலையை அடைந்துள்ளது.

ஆனால் ஏனைய தமிழ் கட்சிகள் மௌனமாக இருப்பதும் இந்திய தூதுவரினால் நடத்தப்படும் உபசாரங்களில் கலந்துகொண்டு ‘13 ஆம் திருத்தத்தை தமிழ் மக்கள் சார்பில் இந்தியாவே கொண்டுவந்தது’ என்று கூறும்போது கைதட்டி வருவதும், இந்தியாவின் கட்டுப்பாட்டுக்குள் இந்த கட்சிகள் முழுமையாக கொண்டு வரப்பட்டு இருப்பதற்கான ஆதாரமாக எடுத்துக் கொள்ளலாமோ என எண்ணத் தூண்டுகிறது.

அதாவது ‘ஈழத் தமிழர்களின் சுயநிர்ணய உரிமை இனப்படுகொலை போன்ற விடயங்களை கதைத்து ரணில் –மோடி கூட்டமைப்பின் திட்டங்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்த இவர்கள் விரும்பவில்லை’ என்று எடுத்துக் கொள்ளலாம்.

தமிழ் அரசியல்வாதிகள் அனைவரும் மௌனமாகியுள்ள இந்த நேரத்தில் தமிழ் புத்திஜீவிகளும் சிவில் சமூகமும் ஜனநாயகத்தின் நான்காவது தூணாகக் கருதப்படும் ஊடகங்களும் என்ன செய்யப் போகிறார்கள் என்பதிலேயே ஈழத்தில் தமிழர்களின் எதிர்காலம் தங்கியுள்ளது.

# ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளையின்படி செயற்படுக! வெடுக்குநாறிமலை நிர்வாகத்திற்கு நீதிமன்றம் உத்தரவு






(கே.வசந்தன்)

வவுனியா வடக்கு, வெடுக்கு நாறிமலை ஆதிலிங்கேஸ்வரர் ஆலய விடயத்தில் நீதிமன்றம் ஏற்கனவே வழங்கிய கட்டளையின்படி செயற்படுமாறு வெடுக்குநாறிமலை ஆலய நிர்வாகத்திற்கு வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

எதிர்வரும் 8ஆம் திகதி மகாசிவ ராத்திரி தினத்தை முன்னிட்டு வெடுக்கு நாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் விசேட பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு ஆலய நிர்வாகத்தினர் முயற்சிகளை எடுத்திருந்தனர்.

எனினும், மின்பிறப்பாக்கி இயந்திரங்களைப் பயன்படுத்தி நிகழ்வுகளை நடத்த முற்பட்டால் அதற்கு நீதிமன்றில் அனுமதி பெறப்படவேண்டும் என்று நெடுங்கேணி பொலிஸாரால் ஆலய நிர்வாகத்திற்கு தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதனையடுத்து வவுனியா நீதிமன்றில் ஆலய நிர்வாகம் சார்பில் கடந்த வாரம் நகர்த்தல் பத்திரம் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. அது தொடர்பான விசாரணைகள் நேற்று மன்றில் முன்னெடுக்கப்பட்டது.

விடயங்களை ஆராய்ந்த நீதிவான் வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட கட்டளையின் பிரகாரம் செயற்படுவதற்கு கட்டளை வழங்கப்பட்டது. வழக்கில் ஆலய நிர்வாகத்தினர் சார்பாக சிரேஸ்ட்ட சட்டத்தரணி திருச்செல்வம் திருஅருள் தலைமையிலான சட்டத்தரணிகள் குழாம் முன்னிலையாகி இருந்தது.

இதேவேளை, வெடுக்குநாறிமலை ஆலயத்தில் பூஜை வழிபாடுகளை மேற்கொள்வதற்கு வவுனியா நீதிமன்றம் கடந்த வருடம் ஏப்ரல் மாதம் உத்தரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## அமைச்சரவை கூட்டத்தில் மத்திய வங்கியின் ஆளுநர்

மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க, நேற்று இடம்பெறும் அமைச்சரவைக் கூட்டத்தில் முன்னிலையாகியிருந்தார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தற்போது மத்திய வங்கி ஊழியர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட்டமைக்கு ஆளும் மற்றும் எதிர்க்கட்சியினர் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்திருந்தனர்.

இதனையடுத்து, ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பில், விளக்கமளிப்பதற்கு, ஆளுநர் நந்தலால் வீரசிங்கவுக்கு அமைச்சரவையினால் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சம்பள அதிகரிப்பு தொடர்பில், விளக்கமளிக்க நேற்று இடம்பெற்ற அமைச்சரவை கூட்டத்தில் மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க முன்னிலையாகியிருந்தார் எனக் குறிப்பிடப்படுகிறது.



## கட்சியில் இருந்து சரத் பொன்சேகாவை நீக்குவதற்கு விதிக்கப்பட்ட தடை நீடிப்பு

நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவை கட்சி உறுப்புரிமை மற்றும் அவர் வகிக்கும் பதவியில் இருந்து இடைநிறுத்துவதற்கான செயற்பாடுகளுக்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்திக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடை உத்தரவு மீள நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு நேற்று , கொழும்பு மாவட்ட நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றைய விசாரணையின் போது, இந்த இடைக்காலத்தடையை நீக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி நீதிமன்றில் அடிப்படை ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தது.

எவ்வாறாயினும், ஐக்கிய மக்கள் சக்திக்கு விதிக்கப்பட்டுள்ள இடைக்காலத் தடையை எதிர்வரும் 19 ஆம் திகதி வரை நீடிக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.



# கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி: நிதியின்றி அகழ்வுப் பணி ஒத்திவைப்பு!

போரினால் அதிகம் பாதிக்கப்பட்ட வன்னியின் கொக்குத்தொடுவாய் பகுதியில் எட்டு மாதங்களுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்ட புதைகுழியில் அகழ்வுப் பணிகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு நிதியில்லை என மாவட்டத்தின் பிரதான அரச பிரதிநிதியால் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் இதுவரை நிதியை விடுவிக்கவில்லை என முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம் நேற்று நீதிமன்றில் அறிவித்தார் என சட்டத்தரணி வீ.எஸ்.நிரஞ்சன் தெரிவிக்கின்றார்.

காணாமற்போனோர் தொடர்பிலான அலுவலகம் நிதியை விடுவிப்பதைத் தொடர்ந்து தாமதப்படுத்தி வருவதாகவும் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளர் நீதிமன்றில் சுட்டிக் காட்டினார் என சட்டத்தரணி குறிப்பிடுகின்றார்.

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வுப் பணி தொடர்பான வழக்கு நேற்று முல்லைத்தீவு நீதிவான் தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா, முல்லைத்தீவு மாவட்ட செயலக பிரதம கணக்காளர் மயில்வாகனம் செல்வரட்ணம், கொக்கிளாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, கொக்கிளாய் பகுதி கிராம அலுவலர் மற்றும் வீ.எஸ். நிரஞ்சன் மற்றும் சட்டத்தரணிகள் குழுவும் முன்னிலையாகியிருந்தனர்.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சினால் மனித புதைகுழியின் அகழ்வுப் பணிகளுக்கு சுமார் 5.7 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாக நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சு உறுதிப்படுத்தியிருந்தது.

நீதி, சிறைச்சாலைகள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் செயலாளருக்குப் பதிலாக கணக்காளர், 2023ஆம் ஆண்டு ஓகஸ்ட் 22ஆம் திகதி, முல்லைத்தீவு மாவட்டச் செயலாளருக்கு "கொக்குத்தொடுவாயில் கண்டுபிடிக்கப்பட்ட மனித எச்சங்கள் குறித்து நீதவான் விசாரணைக்கான மதிப்பீடு" என்ற தலைப்பில் அனுப்பப்பட்ட கடிதத்தில், 5,663,480 ரூபா ஒதுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கடந்த 2023ஆம் ஆண்டு செப்டெம்பர் 15ஆம் திகதி தற்காலிகமாக அகழ்வுப் பணிகள் ஒத்திவைக்கப்பட்டபோது, சுமார் 2.5 லட்சம் ரூபா நிதி எஞ்சியிருப்பதாக முல்லைத்தீவு மாவட்ட சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ தெரிவித்திருந்தார்.

புதைகுழியின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணி 2023 நவம்பர் 29ஆம் திகதி ஒன்பதாவது நாளாக மேற்கொள்ளப்பட்டு நிறுத்தப்பட்ட போது புதைகுழியில் இருந்து குறைந்தது 40 பேரின் எச்சங்கள் மீட்கப்பட்டன.

கொக்குத்தொடுவாய் மகாவித்தியாலயத்தில் இருந்து கொக்கிளாய் நோக்கி சுமார் 200 மீற்றர் தொலைவில் நீர் வழங்கல் திணைக்கள ஊழியர்கள் நீர் குழாய் பதிக்க நிலத்தைத் தோண்டும் வேளையில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜுன் 29ஆம் திகதி வியாழக்கிழமை மாலை மனித உடல் பாகங்கள் மற்றும் ஆடைகளின் ஒரு பகுதி கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 05.03.2024



## மேஷம்

இன்று சவால்களை உற்சாகமாக கையாள வேண்டும். உங்கள் பொறுமையை சோதிக்கும் சூழ்நிலை உருவாகும். மனக் குழப்பம் காரணமாக சரியான முடிவெடுக்க இயலாத நிலை இருக்கும்.

பணியிடத்தில் திறமையாக செயல்பட முடியாது. இன்று பணியில் வளர்ச்சி காண கூடுதல் முயற்சி எடுக்க வேண்டும்.

உங்கள் துணையுடன் நல்லுறவு ஏற்பட நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இந்தப் போக்கை மேற்கொள்வதன் மூலம் திருப்தி நிலவும்.

நிதிநிலைமையில் வளர்ச்சி காணப்படாது. நிதியில் ஸ்திரத்தன்மையும் காணப்படாது.

இன்று பாதுகாப்பின்மை உணர்வும் பதற்றமும் காணப்படும். இது உங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கும்.



## ரிஷபம்

இன்று சற்று சுமாரான நாளாக இருக்கும். இன்று நற்பயன் காண பல விஷயங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். உங்கள் இலக்குகளை எளிதாக அடைவது இன்று சற்று கடினம்.

பணியிடத்தில் பலன்கள் உங்களுக்கு சாதகமாக அமைய நீங்கள் முறையாக திட்டமிட வேண்டும். உங்கள் பணிகளை விவேகத்துடன் கையாள வேண்டும்.

உங்களிடம் குழப்பமான எண்ணங்கள் காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் தேவையற்ற விவாதங்கள் ஏற்பட வாயுப்புள்ளது. பொறுமையை வளர்த்துக் கொள்வது சிறந்தது.

நிதி நிலைமை திருப்திகமாக இருக்காது. அதிகரிக்கும் பொறுப்புகள் காரணமாக செலவு செய்ய வேண்டிய கட்டாயம் காணப்படும். இது உங்கள் குழந்தைகளின் வளர்ச்சி பற்றிய செலவாக இருக்கும்.



## மிதுனம்

இன்று நன்மை விளையும் நாள். அதிர்ஷ்டகரமான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். இன்று எதிர்பாரத பணவரவு காணப்படும்.

உங்கள் பணிகளை முடிப்பதில் வெற்றி பெறுவீர்கள். உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பீர்கள். பிறரின் நன்மதிப்பை பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். இதனால் உறவில் திருப்தி காணப்படும்.

இன்று பண வரவு காணப்படும். உங்கள் நண்பர்கள் உங்களுக்கு பணம் சார்ந்த உதவி புரிவார்கள்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். என்றாலும் மருத்துவ ஆலோசனை மேற்கொள்வது நல்லது.



## கடகம்

இன்று உங்கள் அனைத்து முயற்சிகளிலும் வெற்றி கிடைக்கும். இன்று புதிய நண்பர்கள் மற்றும் புதிய தொடர்புகளைப் பெறுவீர்கள். உங்கள் போக்கில் உற்சாகமான அணுகுமுறை காணப்படும்.

உங்கள் பணியில் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணியை திறமையைப் பயன்படுத்தி நல்ல தரத்துடன் முடித்துக் கொடுப்பீர்கள்.

உங்கள் துணையுடன் நகைச்சுவையான உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இந்த அணுகுமுறை உங்கள் துணையை திருப்திப்படுத்தும்.

இன்று போதிய பண வரவு காணப்படும். உங்களால் பணம் சேமிக்க இயலும்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். ஆரோக்கியத்திற்கு தேவையான தைரியம் மற்றும் ஆற்றல் உங்களிடம் காணப்படும்.



## சிம்மம்

இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்காது. உங்கள் முயற்சிகளில் வெற்றி காண நீங்கள் சிறப்பாக திட்டமிட வேண்டும். இன்று அதிர்ஷ்டம் காணப்படாது.

உங்கள் பணியை திறம்பட ஆற்ற நீங்கள் கவனம் செலுத்தவேண்டும். நீங்கள் விரும்பிய பலனை அடைய முறையாக திட்டமிட வேண்டும்.

உங்கள் துணையிடம் அதிருப்தி மற்றும் அசௌகரியம் உணர்வீர்கள். உங்களின் வேறுபாடான அணுகுமுறை உங்கள் துணையுடனான உறவை பாதிக்கும்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் காணப்படாது. நீங்கள் பணப் பரிவர்த்தனைக்கான ஆவணங்களை முறையாக பராமரிக்க வேண்டும்.

இன்று கால் வலி ஏற்பட வாய்ப்புள்ளதால் உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் தேவை.



## கன்னி

இன்று நீங்கள் விரும்பிய பலனை அடைய பொறுமை அவசியம். சில விஷயங்களில் விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். நற்பலன்களைக் காண திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் பணியில் தவறுகள் செய்ய வாய்ப்புள்ளது. உங்கள் பணிகளை கவனமாகக் கையாள வேண்டும்.

உங்களின் ஏமாற்ற உணர்வு காரணமாக முரண்பாடு காணப்படும். உங்கள் துணையிடம் இதனை வெளிப்படுத்தாமல் கவனமாக இருங்கள். மகிழ்ச்சியை தக்க வைக்க இத்தகைய உணர்வுகளை தவிர்த்தல் நல்லது.

அதிகரிக்கும் செலவுகள் இன்று உங்களுக்கு கவலையை அளிக்கும். உங்கள் பணத்தை சாதுர்யமாக செலவிட வேண்டும்.



## துலாம்

இன்று சமூகமான பலன்கள் கிடைக்கும் நாள். என்றாலும் உறுதியான முயற்சி மேற்கொள்ள வேண்டும். வெற்றி உங்களை நாடி வரும்.

உங்களின் அபாரமான செயல் திறமைக்கு நீங்கள் பாராட்டைப் பெறலாம். உங்கள் தனித்த திறமைகள் உங்களை சிறப்பாக செயல்பட வைக்கும்.

உங்கள் துணையுடன் நட்பு முறையில் நடந்து கொள்வீர்கள்.இதனால் உறவில் பரஸ்பரம் அன்பு மலரும்.

நிதி நிலைமை ஸ்திரமாக சிறப்பாக காணப்படும். உங்கள் சேமிப்பை அதிகரிக்கும் வாய்ப்பு உள்ளது.

இன்று சிறப்பான ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்கள் மன உறுதி காரணமாக உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



## விருச்சிகம்

இன்று சாதகமான நாளாக இருக்காது. இன்று நற்பலன்களைக் காண மிகுந்த முயற்சி எடுக்க வேண்டும். சில சமயங்களில் நீங்கள் பொறுமை இழப்பீர்கள். அமைதியாகவும் ஓய்வாகவும் இருப்பது சிறந்தது.

குறித்தநேரத்தில் பணிகளை முடிக்க இயலாது. இது உங்களுக்கு கவலையை அளிக்கும்.

உங்கள் துணையிடம் குழப்பமான உணர்வுகளை வெளிபடுத்துவீர்கள். ஆரோக்கியமான உறவை பராமரிக்க இத்தகைய உணர்வுகளை தவிர்க்க வேண்டும்.

இன்று பணவரவிற்கான சாத்தியமான நாள் அல்ல. நீங்கள் தேவையின்றி சில விஷயங்களுக்காக பணத்தை செலவு செய்ய நேரும்.

உங்கள் தாயின் ஆரோக்கியத்திற்காக பணம் செலவு செய்வீர்கள்.

# இன்றைய ராசி பலன்கள் - 05.03.2024




இன்று துடிப்பான நாளாக இருக்காது. மனக் குழப்பங்கள் காணப்படும். பிரார்தனை மற்றும் இசை போன்ற நிகழ்சிகள் மன ஆறுதலை அளிக்கும்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும். முறையாக திட்டமிட்டு செயலாற்றுவதன் மூலம் நன்மை விளையும்.

குடும்ப பிரச்சினை காரணமாக உங்கள் துணையுடன் சண்டை ஏற்பட வாய்புள்ளது. இது உறவின் ஸ்திரத்தன்மையைப் பாதிக்கும்.

இன்று பணப்பற்றாக்குறை காணப்படும். இதனால் உங்களுக்குக் கவலை ஏற்படும்.

இனிப்பு உணவு வகைகளை தவிர்க்கவும். இதனால் பல் வலி ஏற்பட வாய்ப்புள்ளது.




இன்று முன்னேற்றகரமான பலன்கள் கிடைக்கும் நாள். உங்கள் இலக்குகளில் வெற்றி பெறுவதற்கான ஆற்றலும் உற்சாகமும் உங்களிடம் காணப்படும். அனைத்து விதத்திலும் செழுமை காணப்படும்.

புதிய வாய்ப்புகள் கிடைப்பதற்கான சாத்தியம் உள்ளது. இதன் காரணமாக திருப்தியான மனநிலை காணப்படும். உங்கள் பணிகளை விரும்பி அனுபவிப்பீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்வான உணர்வுகளை பகிர்ந்து கொள்வீர்கள். மகிழ்ச்சியுடன் வெளியிடங்களுக்கு சென்று வருவீர்கள்.

இன்று நிதிநிலைமை சிறப்பாக உள்ளது. நிதியில் ஸ்திரத்தன்மை காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். மகிழ்ச்சியானமனநிலைஉங்கள்ஆரோக்கியத்தைசிறப்பாக வைத்திருக்கும்.




உங்கள் செயல்களில் யதார்த்தமாகவும் முறையாகவும் இருக்க வேண்டும்.உங்கள்செயல்களைகையாள்வதில் சில தடைகள் காணப்படும். இன்றைய நாள் சராசரி பலன்களை அளிக்கும்.

பணியிடத்தில் வெற்றி காண கடும் முயற்சி செய்ய வேண்டும். உங்கள் பணிகளை திறமையாக ஆற்ற திட்டமிட்டு செயல்பட வேண்டும்.

உங்கள் துணையுடன் தவறான புரிந்துணர்வு காணப்படும். இதனால் இருவரிடையே கருத்து வேறுபாடு ஏற்படலாம். இதனை தவிர்க்க முயற்சி செய்யவும்.

நிதி வளர்ச்சி இன்று சாத்தியமில்லை. உங்கள் குடும்பத்துக்காகக் கூடுதல் செலவுகள் செய்ய நேரும்.

தோல் எரிச்சல் ஏற்பட வாய்ப்புள்ளது. ஆரோக்கியப் பிரச்சினையை தவிர்க்க அதிக நீரைப் பருகவும்.




இன்று உங்கள் செயல்களில் வெற்றி காண்பீர்கள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைவீர்கள். இன்று உங்களுக்குச் சாதகமான நாள்.

பணியிடச் சூழல் சிறப்பாக இருக்கும். நற்பலன்கள் கிட்டும். பணி குறித்து உங்கள் மனதில் திருப்தி காணப்படும்.

உங்கள் துணையுடன் நல்ல புரிந்துணர்வு காணப்படும். உங்கள் உணர்வுகளை வெளிப்படையாக பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் மிகவும் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

இன்று நிதி வளர்ச்சி ஸ்திரமாக காணப்படும். எதிர்பாராத பண வரவு காணப்படும்.

உங்கள் மனதில் காணப்படும் மகிழ்ச்சி காரணமாக இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.






# நாட்டில் பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு புதிதாக சட்டக் கட்டமைப்பு அறிமுகம் செய்யப்படும்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு






"நாட்டில் புதிய பொருளாதார மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக கடந்த 14 மாதங்களில் 42 புதிய சட்டங்கள் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளன. மேலும், 62 சட்டங்களை, நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற எதிர்பார்க்கிறோம். அவை இம்முறை நாடாளுமன்றத்தில் நிறைவேற்ற முடியாவிட்டால் அடுத்த நாடாளுமன்றத்தில் முன்வைத்து நிறைவேற்றப்படும்."

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சட்டச் சீர்திருத்தம் தொடர்பாக 'வட்ஸ் நிவ்' இளம் சட்டத்தரணிகளுடனான கலந்துரையாடலில் ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"நாடு எதிர்கொள்ள நேரிட்ட இந்த நிலைக்கு அனைவரும் பொறுப்பேற்க வேண்டும். இதிலிருந்து யாரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இந்த நிலைமையில் இருந்து, முன்னோக்கிச் செல்ல வேண்டும். இன்று கடனை அடைக்க முடியாத நிலையில் உள்ளோம். எனவே கடனைத் திருப்பிச் செலுத்த 2026-2027 வரை கால அவகாசம் பெறுவதற்கான பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம். அதனுடன் இன்னும் பல விடயங்கள் உள்ளன.

2022 அரசாங்க வருமானம், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 8.3 வீதம் ஆகும். 2023ல் அதை 10.9 வீதமாக உயர்த்தினோம். அதனால் எமது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கவில்லை. மறை 2 வீதம் வீதத்தில் இருந்து இந்த ஆண்டு 13.1 வீதமாக அதிகரிக்க எதிர்பார்க்கிறோம். அப்போது மொத்த உள்நாட்டு உற்பத்தி அதிகரிக்கும். 2028 இற்குள், இது 15.2 வீதமாக உயரும். 8.3 வீதத்திலிருந்து 15.2 வீதமாக அதிகரிப்பதென்பது சுமார் 175 வீத அதிகரிப்பைக் குறிக்கிறது.

முதன்முறையாக, 2023இல் நமது முதன்மை பட்ஜெட் 6.7 வீத உபரியைக் காண்பித்தது. நாம் அதை 2.3 வீதமாகக் கொண்டு செல்ல வேண்டும். மேலும் பட்ஜெட் பற்றாக்குறை 2022 இல் 10.2 வீதம் ஆகும். 2028இற்குள் அதை 3.9 வீதமாக மாற்ற வேண்டும். இவை எளிதான பணிகள் அல்ல. இவைதான் எங்களுக்கு இருக்கும் சவால். எங்கள் கடன் 2022 மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 128 வீதம் ஆகும். 2032 இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 95 வீதமாக குறைக்க வேண்டும். 2022 இற்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 35 வீதம் கடன் வாங்கினோம். அதை 13 சதவீதமாகக் குறைக்க வேண்டும்.

இந்த நிலைமையுடன் நாம் எவ்வாறு தொடர்ந்து முன்னோக்கி செல்ல முடியும்? நாட்டின் பொருளாதாரம் மாற்றியமைக்கப்பட வேண்டும். உள்நாட்டுப் பொருளாதாரத்திலிருந்து ஏற்றுமதிப் பொருளாதாரத்திற்கு மாற வேண்டும். இறக்குமதி செய்ய நம்மிடம் அந்நியச் செலாவணி இல்லை. போட்டி நிறைந்த ஏற்றுமதி பொருளாதாரத்திற்கு நாம் செல்ல வேண்டும். அதே நேரத்தில், டிஜிட்டல் மற்றும் பசுமைப் பொருளாதாரத்தை நோக்கி நாம் செல்ல வேண்டும்.

இந்த புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதில், புதிய சட்டங்கள் அவசியம். ஐரோப்பிய வர்த்தக அமைப்பு ஒல்லாந்து ஆட்சிக் காலத்தில் உருவாக்கப்பட்டது. ரோமன்-ஒல்லாந்து முறைமை இன்றும் நமது சட்டத்தின் ஒரு பகுதியாக உள்ளது. 1835 இல் வெள்ளையர்கள் பொருளாதாரத்தை திறந்து விட்டார்கள். பின்னர் அவர்கள் சட்டம் கொண்டு வந்தனர். 1970 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம் சோசலிச கட்டுப்பாட்டுப் பொருளாதாரத்தை உருவாக்கியது. அதற்கும் புதிய சட்டங்கள் கொண்டு வரப்பட்டன.

1977 ஜே.ஆர். ஜெயவர்தன திறந்த பொருளாதாரத்தை அறிமுகப்படுத்தினார். அதன்போதும் சட்டங்கள் கொண்டுவரப்பட்டன. இந்த புதிய பொருளாதார திட்டத்திற்கும் சட்டங்கள் கொண்டு வரப்பட வேண்டும்.

அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளைப் பார்க்கும்போது, கடந்த 14 மாதங்களில் 42 சட்டங்கள் கொண்டு வரப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளன. இதுவொரு சாதனையாகும். எஞ்சிய 62 சட்டங்களை எவ்வாறு முன்வைப்பது என்பதுதான் சட்டமா அதிபருக்கு இருக்கும் சவாலாகும். அதற்காக நாடாளுமன்றத் தேர்தலை ஒத்திவைக்க முடியாது. இம்முறை நிறைவேற்ற முடியாததை அடுத்த நாடாளுமன்றத்தில் முன்வைக்க நேரிடும். இந்த வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டால், அடுத்த சில ஆண்டுகளில் புதிய பொருளாதாரத்தை உருவாக்கும் புதிய சட்டக் கட்டமைப்பு உருவாகும்.

துறைமுக நகர சட்டத்திற்குப் பதிலாக புதிய சட்டம் கொண்டு வரப்படும். கடல் சார் பொருளாதாரத்தை உருவாக்குவதே இதன் நோக்கம். ஒற்றைக் கரையோரப் பொருளாதாரம் உருவாக்கப்படும் போது இலங்கையின் சட்டத்தால் அந்தச் செயற்பாடுகளைச் செய்ய முடியாது. ஒற்றைப் பொருளாதார கட்டுப்பாட்டு எல்லையில் பிரித்தானிய வணிகச் சட்டங்கள் செயற்படுத்தப்படுகிறன.

இந்தச் சட்டங்களை நடைமுறைப்படுத்த புதிய சட்டத்தரணிகள் குழுவொன்று இருக்க வேண்டும். உலகம் ஏற்றுக்கொள்ளும் சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டும். ஏனென்றால் உலகத்திற்கு நமது சட்டங்கள் தெரியாது. நாட்டை அபிவிருத்தி செய்ய, நாம் அந்த வழியைப் பின்பற்ற வேண்டும்.

மேலும், வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபடும் அரசு நிறுவனங்களின் கட்டமைப்பை மாற்றி வருகிறோம். அனைத்து அரசுகூட்டுத்தாபனங்களும் கம்பனிகளாக மாற்றப்படுகின்றன. அந்த நிறுவனங்களின் பங்குகள் அனைத்தும் ஒரு பிரதான நிறுவனத்திடம் ஒப்படைக்கப்படும்.

புதிய பொது நிதி மேலாண்மை சட்டம் அறிமுகப்படுத்தப்படுகிறது. மேலும், பொதுக்கடன் மேலாண்மை சட்டம் கொண்டு வரப்படுகிறது. மேலும், விவசாய நவீனமயமாக்கல் சட்டம் கொண்டு வரப்படுகிறது. இந்த இலக்குகளை அடைய பொருளாதார மாற்றம் சட்டம் கொண்டு வரப்படுகிறது. தற்போதைய முதலீட்டுச் சபைக்குப் பதிலாக பொருளாதாரக் குழுவை உருவாக்கவும் எதிர்பார்க்கப்படுகிறது. கொம்பனிச் சட்டத்தில் பணிப்பாளர்களுக்கு உள்ள அதிகாரம் இவர்களுக்கும் கிடைக்கும். மேலும் அரச – தனியார் கூட்டுமுயற்சி தொடர்பிலும் சட்டம் கொண்டுவரப்படும்."

– என்றார்.